# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **30 ஜூன் 2019** | **பொதுக்காலம் 13ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

பொதுக்காலம் 13ஆம் ஞாயிறைக் கொண்டாடத் திருஅவை அழைக்கும் இவ்வேளையில் நம் ஆலயத்தில் ஒருமனதோராய்க் குழுமியிருக்கும் இறைமக்களாகிய உங்களுக்கு அன்பு வாழ்த்துக்கள்.

கலப்பை, நுகம் என்ற வார்த்தைகள் இன்றைய வாசகங்களை அலங்கரிக்கும் சொற்கள். இன்றைய முதல் வாசகத்தில், கலப்பையைப் பிடித்து உழுது கொண்டிருந்த எலிசாவைத் தேடி வந்து தன் சீடராக எடுத்துக் கொள்கின்றார் இறைவாக்கினர் எலியா. கிறிஸ்துவில் உயிர்பெற்றெழுந்த கலாத்திய திருஅவை மக்கள் மீண்டும் அடிமைத்தனம் என்னும் 'நுகத்தை' ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று இரண்டாம் வாசகத்தில் அறிவுறுத்துகின்றார் பவுல். நற்செய்தி வாசகத்தில் 'கலப்பையில் கைவைத்த பின் திரும்பிப் பார்ப்பவர் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல' என இறையாட்சிக்கான சீடத்துவத்தின் பண்பு பற்றிச் சொல்கின்றார் இயேசு.

கலப்பையைக் களத்தில் இறங்கினால்தான் கலப்பையின் நோக்கமும், உழுபவரின் நோக்கமும், விவசாய நிலத்தின் நோக்கமும் நிறைவேறுகிறது. இவைகளின் நோக்கம் நிறைவேறவில்லை என்றால் விதை விதைப்பதும், விதை விளைச்சல் தருவதும் சாத்தியமல்ல.

நம் சிந்தனையில் இறைவார்த்தைகளால் நம் உள்ளத்தை உழுது நிலைவாழ்வு என்னும் விளச்சலை அடைய, ஈடுபாடு உள்ளக் கிறிஸ்தவ வாழ்வை உயிரோட்டமாக வைத்துக்கொள்ள இத்திருப்பலிக் கொண்டாடங்களில் உளமாறப் பங்குக்கொண்டு செபிப்போம்.

## CHARITIES WEEK 2019-இல் இறைமக்களால் அளிக்கப்பட்ட காணிக்கை நகர மாவட்டம் (CITY DISTRICT)

| ஆலயம் | 2019 S$ | 2018 S$ |
|---|---|---|
| நல்லாயன் பேராலயம் | 79,832 | 7,700 |
| தூய யோசேப்பு ஆலயம் | 231,750 | 223,200 |
| தூய பேதுரு  தூய பவுல் ஆலயம் | 15,350 | 23,710 |
| **தூய லூர்து அன்னை ஆலயம்** | **272,176** | **176,585** |
| திரு இருதய ஆண்டவர் ஆலயம் | 78,192 | 64,885 |
| தூய தெரேசா ஆலயம் | 126,205 | 137,862 |
| தூய அல்போன்சா ஆலயம் | 14,255 | 5,020 |
| தூய பெர்னதேத் ஆலயம் | 355,896 | 473,439 |
| தூய மிக்கேல் ஆலயம் | 66,960 | 79,498 |

தாராள மனதுடன் காணிக்கை அளித்த உங்கள் அனைவருக்கும் நன்றி!

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக "Church of Our Lady of Lourdes" என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் "Building Fund" என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




பள்ளி விடுமுறை காரணமாக இவ்வாரம் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது. மீண்டும் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், அடுத்த வாரம் (07-07-2019) முதல் ஆரம்பமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**13-07-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**




இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.



## நற்கருணை ஆராதனை வழிபாடு

**07-07-2019 ஞாயிறு மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## குருக்களுக்கான ஆண்டு தியானம் - 2019

அன்பார்ந்தவர்களே! நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டக் குருக்களுக்கான ஆண்டுத் தியானம், வருகின்ற ஜூலை 1 முதல் 5 வரை (திங்கள் முதல் வெள்ளி) இடம்பெறவுள்ளதால், இந்த நாட்களில் திருப்பலி நடைபெறாது என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

Spiritual Renewal

அதற்குப் பதிலாக, நமது ஆலயத்தில் மதியம் 12:30 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும் நற்கருணை வழங்கும் நிகழ்வு இடம்பெறும் என்பதைக் கவனத்தில் கொள்க!

நம் குருக்களுக்காக ஜெபியுங்கள்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | 1 அரசர் 19:16,19-21 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 16: 1-2, 5. 7-8. 9-10. 11 |
| **பதிலுரை:** | ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து |
| **இரண்டாம் வாசகம்:** | கலாத்தியர் 5:1,13-18 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! “ஆண்டவரே பேசும். உம் அடியான் கேட்கின்றேன். நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன” அல்லேலூயா! |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 9 : 51-62 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

